<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

OS. 55/2006

2022 ஆம் ஆண்டு ஜூன் ஆம் 23 ஆம் நாள் பி.த.சா 3-ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி சத்தியப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வசந்தா | வயது | : | 56 |
| தந்தை/கணவர் பெயர் | : | துரைராஜ் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

பிரதிவாதிகள் 1 முதல் 3, 13, 14, 17, 18 தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை

வாதிதரப்பில் குறுக்கு விசாரணை - எதிர் வழக்குரைக்கு நான்தான் தகவல் கொடுத்தேன். எனக்கு 56 வயதாகிறது. 1832, 1834, 1835 ஆகிய வருடங்களில் உள்ள ஆவணங்களை பற்றி நேரடியாக தெரியாது. வாதி வம்சாவழிகள் கேள்விப்பட்டதுதான், நேரடியாக தெரியாது. OA.99/1962 ஜாயிண்ட் கமிஷனர் உத்தரவின் நகல் வாங்கி நான் பார்க்கவில்லை. தள்ளுபடி ஆகி விட்டது என்பதை கேள்விப்பட்டு சொல்கிறேன். வாதி அறக்கட்டளை சம்மந்தமாக தாவா சொத்தை பொறுத்து பரம்பரை அறங்காவலர் இல்லை என்பதற்காக இந்து அறநிலையத்துறையில் எந்த ஆவணங்களையும் நான் பார்க்கவில்லை. OS.251/1995



வாதிகள் தாக்கல் செய்த வழக்கு சம்மந்தமாக நான் எந்த ஆவணங்களையும் வாங்கி பார்க்கவில்லை. வாதிக்கு அளிக்கப்பட்ட இனாம் பட்டா பற்றி ஆவணங்களை வாங்கி

தெரிந்து கொண்டேன். நான் எதிர் வழக்குரையில் குறிப்பிட்ட வாதிகள் வில்வநாத சுவாமி கோயிலின் நிர்வாக அதிகாரி மீது தாக்கல் செய்த OS.40/2012 வழக்கை பற்றி நான் எதுவும் தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி வழக்கு OS.40/2012 வாதிகளுக்கு ஆதரவாகவும், இந்துஅறநிலையத்துறைக்கு எதிராகவும் தீர்ப்பாகி விட்டது என்றால் அதுபற்றி தெரியாது. எங்களுடைய எதிருரை, நான் தற்போதைய முதல்விசாரணையின் பிரமாண வாக்குமூலம் கேள்விப்பட்டதை வைத்துதான் சொல்லியிருக்கிறேன் என்றாலும், நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். 1357 என்பது வழக்கு சொத்துக்கு சம்மந்தமான சர்வே நம்பர் என்றால் சரிதான். அதில் ஒரு பகுதியை நகராட்சி ஆர்ஜிதம் செய்து ரோடு போட்டு விட்டார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. நான் மேற்படி தாவா சொத்தை பொறுத்து அரசாங்க அலுவலகத்தில் யாரிடமிருந்து பெறப்பட்டது என்றும், யாருக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டது என்றும் எதுவும் தெரிந்து கொள்ளவில்லை. இதை எல்லாம் தெரிந்து கொள்ளாமலேயே வாதிக்கு பாத்தியம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 6 ஆம் பிரதிவாதி. 6 முதல் 12 பிரதிவாதிகளுக்காக கேஸ் நடத்துகிறேன். அவர்கள் எல்லாம் எனக்கு பக்கத்து வீட்டுக்காரர்கள். உறவினர்கள் கிடையாது. நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஒரே வக்கீல் வைத்துள்ளோம். அவர்கள் சார்பாக நான் சாட்சியம் அளிக்கிறேன். பிதசாஆ.75 ஆவணம் கடலூர் நகராட்சி வழங்கிய டிமாண்ட் ஆக உள்ளது என்றும் எந்த சொத்துக்கு சம்மந்தப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சொத்து வரி



செலுத்தியதாலேயே எந்த உரிமையும் வழக்கு சொத்திலிருந்து எங்களுக்கு சித்திக்காது என்றால் சரியல்ல. சொத்து வரி தாவா சொத்துக்கு சம்மந்தப்பட்டது என்று நிரூபிக்க எனக்கு உரிமை உள்ளது என்றால் சரி. பிதசாஆ.77 ஆவணம் என் வழக்கிற்கு எந்தவிதத்திலும் உதவவில்லை என்றால் சரியல்ல. பிதசாஆ.78 ஆவணம் என் வழக்கிற்கு எந்தவிதத்திலும்

உதவவில்லை என்றால் சரியல்ல. வழக்கு விவரங்கள் எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு விவரங்கள் எதுவும் தெரிந்து கொள்ளாமல் வழக்கு சொத்துக்கு சொந்தமான எந்தவித விசாரணையும் செய்யாமல் வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட முன்வழக்குகள் பற்றி தெரியாமல் இந்த வழக்கில் எதிர் வழக்குரை, முதல் விசாரணை சாட்சியாகவும் ஆஜராகி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் எடுத்துக்கொண்ட கட்சிக்கு நேரடியான ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி தரப்பில் வழக்கு சொத்து தங்களுக்கு பாத்தியம் என்பதை உரிய ஆவணங்கள் மூலமும், முன்வழக்கு மூலமும் நிரூபித்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை